[23rd August 1961

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: There is already a road from Pennagaram to Nagamarai.

SRIMATHI HEMALATHA DEVI: ஏற்கெனவே இருக்கும்படியான மண் ரோட்டை மெட்டல் ரோடாக போடுவதற்கு என்ன எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் அதற்காக எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது.

SRIMATHI HEMALATHA DEVI: ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும் என்று சொல்லுவதினாலே இந்த ரோட்டை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அந்த வேலையைச் செய்ய முன் வருவார்களா? அப்படியானால் ஹைவேஸ் டிபார்ட்மெண்டிடம் அந்த வேலையை எடுத்துச் செய்யும்படி உத்தரவு போடுவார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பூர்த்தியாகாமல் இருக்கும் வேலைகளைச் செய்ய வேண்டிய நிலைமையில், இந்த வேலையையும் ஏற்று நடத்த முடியுமா அல்லது பஞ்சாயத்து யூனியன் மூலமாக 'வில்லேஜ் கிராண்டுகள்' மூலம் இதை நடத்த முடியுமா என்று ஹைவேஸ் என்ஜினியரிடம் கேட்டிருக்கிறோம். அவரிடமிருந்து பதில் கிடைத்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Bridge for Adaipparu

*1358 Q.—SRI M. D. THIAGARAJA PILLAI (on behalf of SRI A. VEDARATHNAM): கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டித் தாலுகா, தலைக்காடு கிராமத்திற்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள அடைப்பாற்றுக்குப் பாலம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளதா?

(இ) அப்படியானால், என்ன செலவில் எப்பொழுது கட்டப்படும்?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (அ) No, Sir.

(இ) Does not arise.

Industrial Development

*1359 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரஷ்ய நாட்டின் முதல் துணைப் பிரதமருடன் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிபற்றி சமீபத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரம் என்ன?